# பொருள்கள்

1. இந்நகராட்சி அலுவலக பிரிவுகள் மற்றும் வசூல் மையங்களில் உள்ள கணனிகள் மிகவும் பழுதடைந்து பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாததால் அதனை மாற்றி புதிதாக 6 கணனிகள் வாங்கவும் கணனி பிரிவிற்கு தேவையான 3 பேசர் பிரிண்டர்கள் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 470.000/–க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும்.

**<u>அலுவலக குறிப்பு–</u>** வினியோகம் மற்றும் முடிவு செய்தல் துறை,(Dgs & D) மூலம் நேரடியாக கொள்முதல் செய்ய மன்ற அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 12586/2014/இ3

**தீர்மான எண் : 609 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சி ஒழுகினசேரி மேம்பாலத்தில் 6 எண்ணம் 6 மீட்டர் உயரமுள்ள மின் கம்பம் அமைத்து அதில் 32 வாட்ஸ் சோலார் விளக்குகள் அமைப்பதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,10,000/– மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு–</u>** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 12887/2014/இ4

**தீர்மான எண் : 610 – அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜ் 5 மாடி கட்டிடத்தின் முன் பக்கம் உள்ள குமரி கேன்டீன்– கில்ட் ஆக்சர்வீஸ் கடைக்கு மாதவாடகை ரூ.142/– என மிகவும் குறைவாக உள்ளது. எனவே மேற்படி நிறுவனத்திற்கு வாடகைக்கு வழுங்கப்பட்டுள்ள கடைக்கு அரசாணை எண்.92 (ந.நி.ம.கு.வதுறை) நாள். 03.07.2007–ன் படி தற்போது நடைமுறையில் உள்ள அரசு மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்ய நகராட்சி உதவி பொறியாளரே கேட்டுக்கொள்ளப்பட்டது. அன்னார் நேராய்வு செய்து ரூ.4350/– மாத வாடகை நிர்ணயம் செய்து தனது 03.07.2014–ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே, 01.04.2014 முதல் 31.03.2015 முடிய மாத வாடகை ரூ.4350/–எனவும், 01,04,2015 முதல் 3 ஆண்டுகளுக்கு அரசாணை எண்.92–ன்படி 15% வாடகை உயர்வு செய்து வழஙகவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2392/2014/அ13

**தீர்மான எண் : 611 – அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் வார்டு எண்.1 முதல் 52 வரையிலான வார்டுகளில் 2014–2015–ம் ஆண்டிற்கு (01.04.2014 முதல் 31.03.2015 முடிய) பொது நிதியின் கீழ் பணிகள் மேற்க்கொள்ளும் பொருட்டு தினசரி நாளிதழில்களில் விளம்பரம் செய்யும் வகைக்கு வரும் பில்படி ஆகும் தொகைக்கு விளம்பர கட்டணம் வழஙக மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 14462/2012/இ1

**தீர்மான எண் : 612 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 24–ல் உள்ள பெருவிளை அரசு உயர்நிலைப்பள்ளி அருகே போர்வெல் அமைக்க மதிப்பீடு தயார் செய்து ரூ.2,50,000/– நகர்மன்ற தீர்மானம் எண். 2363 நாள் 28.03.2013–ன் படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.T, ஹரிகிருஷ்ணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளி நகர் மன்ற தீர்மானம் எண்.3480 நாள்.30.10.2013–ன்படி அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணியினை செய்வதற்கு போதுமான இடவசதி இல்லாததால் குடிநீர் பணியின் அவசரம் கருதி பெருவிளை வணிகர் தெரு அம்மன் கோயில் அருகே போர்வெல் அமைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> அனுமதிக்கலாம். கோப்பு எண். 15/13–14/இ2

**தீர்மான எண் : 613 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.34–ல் உள்ள குறுந்தெரு பூங்காவின் முன்புறம் உள்ள திறந்தவெளி கிணற்றின் உட்பகுதியில் கான்கிரீட் தடுப்புச்சுவர், மோட்டார் மற்றும் பம்ப்ரூம் சரி செய்யவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,40,000/–க்கு பணிமேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 12680/2014/இ2

**தீர்மான எண் : 614 – அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 52 நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் நகராட்சி சட்ட திட்டங்கள் தெரிந்துகொள்ள ஏதுவாக Municipal Act 1920 மற்றும் Municipal Manual ஆகிய புத்தகங்கள் வழங்க திரு. S.V.உதயகுமார் வார்டு .1–நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளார், எனவே, மேற்படி புத்தகங்கள் இயக்குநர், எழுதுப்பொருட்கள் மற்றும் அச்சுதுறை மூலம் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,00000/– மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> மன்ற தீர்மானத்திற்கு உட்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்

கோப்பு எண். 12097/2014/சி1

**தீர்மான எண் : 615 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி வாகனம் எண். TN.74. 2093–க்கு தகுதி சான்றிதழ் பெறுவதற்கு பழுத பணிகள் சரி செய்வதற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. கே.எஸ்.எஸ்.எஸ் ஆட்டோ மொபைல்ஸ் – ரூ.19560/–
   நாகர்கோவில்
2. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் – ரூ.21460/–
   நாகர்கோவில்

<u>அலுவலக குறிப்பு–</u> 1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி . கே.எஸ்.எஸ்.எஸ் ஆட்டோ மொபைல்ஸ் கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற செலுத்த வேண்டிய கட்டணத்துக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண். 1393/2008/இ3

**தீர்மான எண் : 616 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சி பொறியர் பிரிவு வாகனம் TN.74 E.6583–ல் ஏற்பட்டுள்ள கீழ்கண்ட பழுதுகள் சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.19,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>வேலை விபரம்</u>

1. முன்பக்கமுள்ள கண்ணாடி மாற்றுதல்,
2. நான்கு வீல் பட்டைகழற்றி வரப்படித்து புஷ் மாற்றி சரி செய்தல்.
3. செல்ப் மோட்டார் சரி செய்தல்.
4. ரேடியேட்டர் ஒஸ் மாற்றுதல்.
5. டீசல் பில்டர், ஆயில்பில்டர் மாற்றுதல்.
6. எல்லா ஜாயின்ட்கள், புதுப்பல்புகள், சாப்ட், கிரவுண்,பிளியின், ஜாயின்ட் செக்கப் செய்தல்.
7. அலைமென்ட் பார்த்தல்
8. டோர்லாக்குகள் சரிபார்த்தல்.
9. புல் வாட்டர் சர்வீஸ் செய்தல்.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம். கோப்பு எண்.10355/2007/இ3

**தீர்மான எண் : 617 – அனுமதிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சி வாகனம் எண். TN.74.ஏ 2036–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. கே,எஸ்.எஸ்.எஸ் ஆட்டோ மொபைல்ஸ் – ரூ.3550/–
   நாகர்கோவில்
3. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் – ரூ.3425/–
   நாகர்கோவில்

<u>அலுவலக குறிப்பு–</u> குறைந்த விலைப்புள்ளி கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 7229/2008/இ3

**தீர்மான எண் : 618 – அனுமதிக்கப்பட்டது.**

11. இந்நகராட்சிக்கு புதிதாக வாங்க உள்ள மகேந்திரா &. மகேந்திரா லிமிடெட் நிறுவனத்திலிருந்து ஜீப் வாங்க மன்றதீர்மான எண்.47– நாள். 22.12.2011–ல் அனுமதிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டு மேற்படி நிறுவனத்தின் 28.05.2014–ம் தேதிய விலைப்புள்ளிபடி ரூ.6,09,627/–க்கான காசோலை அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி மகேந்திரா நிறுவனத்தின் 08.07.2014–ம் தேதிய கடிதத்தில் ரூ.6,14,424/–ல் ரூ.6,09,627/– போக மீதமுள்ளத்தொகை ரூ.4797/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உதவிபொறியாளரின் 28.07.2014–ம் தேதிய அறிக்கையில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு எண். பெறுவதற்கும் மற்றும் உதிரிபாகஙகள் (Extra Fittings) பொறுத்துவதற்கும் உத்தேச மதிப்புத்தொகை ரூ.1,35,000/–ம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்கண்டுள்ளபடியான செலவினஙகளுக்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u> அனுமதிக்கலாம். கோப்பு எண். 19987/2012/இ1

**தீர்மான எண் : 619 – அனுமதிக்கப்பட்டது.**

12. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14—ல் சவேரியார் கோவில் தெருவில் உள்ள கழிப்பிடம் பழுதடைந்து காணப்படுவதால் அதனை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.65,000/—க்கு பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு— அனுமதிக்கலாம். கோப்பு எண். 12909/2014/இ1

**தீர்மான எண் : 620 – அனுமதிக்கப்பட்டது.**

13. இந்நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படியான பணிகளுக்கு தணிக்கைத் தடை இல்லாத வேலைகளுக்கு காலம் கடந்த வைப்புத்தொகையிலிருந்து வைப்புத்தொகை திரும்ப வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீடு எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு. J.ஜீவராஜ் | 81/09—10 | 14500/— |
| 2 | " 1% EMD | 275/09.10 | 13,250/— |
| 3 | " 1% பில்லில் பிடித்தம் செய்த தொகை | 275/09—10 | 13,250 |
| | | மொத்தம் | ரூ.41.000/— |

அலுவலக குறிப்பு— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 10531/2014/இ1

**தீர்மான எண் : 621 – அனுமதிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2—ல் சுய உதவி குழுக்களுக்கு கூட்டம் நடத்த போதுமான இட வசதி இல்லாத காரணத்தால் திருவள்ளுவர் தெருவில் சமுதாய நலக்கூடம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,00,000/—க்கு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு— அனுமதிக்கலாம். SJSRY திட்டத்தில் நிதி பெற்று பணி செய்யலாம்.

கோப்பு எண். 2845/2014/இ1

**தீர்மான எண் : 622 – அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.35—ல் உள்ள மறக்குடித்தெருவில் போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் வேலைக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,80,000/—க்கு குடிநீர் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு— அனுமதிக்கலாம். கோப்பு எண். 12012/2014/இ2

**தீர்மான எண் : 623 – அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சி வாகனம் எண். TN.74.J 2839—ல் ஏற்பட்டுள்ள பணிகளை சரிசெய்யவும் அதனை அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஆனமலைஸ் ஏஜென்ஸிஸ் மதுரை பிரைவேட் லிமிடெட் திருநெல்வேலியில் பழுதை சரி செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6168/—க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

அலுவலக குறிப்பு— அனுமதிக்கலாம். கோப்பு எண். 5021/2006/இ

**தீர்மான எண் : 624 – அனுமதிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சி குடிநீர்வாகனம் எண். TN.74.D 2037—ல் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் புதிய மின்கலப்பெட்டி வாஙகவும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| பராமரிப்பு பணிகள் | | புதிய மின்கலப்பெட்டி | |
|---|---|---|---|
| பெயர் மற்றும் முகவரி | தொகை | பெயர் மற்றும் முகவரி | தொகை |
| கே,எஸ்.எஸ்.எஸ ஆட்டோ மொபைல்ஸ் நாகர்கோவில் | ரூ.14,250/— | சிவனேஷ் பேட்டர் ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ.11,500/— |
| கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ.15750/— | கென்னடி பேட்டரி ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ.11400/— |

<u>**அலுவலக குறிப்பு—**</u> பராமரிப்பு பணிகள் செய்ய குறைந்த ஒப்பந்தப்புள்ளி கே,எஸ்.எஸ்.எஸ் ஆட்டோ மொபைல்ஸ் கொடுத்துள்ளதையும் புதியமின் கலப்பெட்டி வாஙக கென்னடி பேட்டரி ஒர்க்ஸ் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 9081/2007/இ3

**தீர்மான எண் : 625 — அனுமதிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சிக்குட்பட்ட குடிநீர் மற்றும் தெருவிளக்கு வாகனஙகளை இயக்குவதற்கு ஓட்டுநர் பணியாளர்களை தினக்கூலி (ஒப்பந்த அடிப்படையில்) அடிப்படையில் நான்கு பணியாளர்களை நியமிப்பதற்கு மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலக ந.க.எண். A1/11060/2013 நாள். 25.04.2013—ன் படி ரூ.330/— (ஒரு நாளுக்கு) என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு வருடத்திற்கு ஆகும் செலவுத்தொகை ரூ.4,80,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு—**</u> TEXCO மூலம் மேற்படி பணிக்கு ஓட்டுனர் கோரலாம் (அல்லது) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

கோப்பு எண். 11252/2014/இ2

**தீர்மான எண் : 626 — அனுமதிக்கப்பட்டது.**